[12th November 1965

கடலூரில் பஸ் டெப்போ

*514 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் பஸ் டெப்போ கட்டும் திட்டம் எந்த நிலையில் இருக்கின்றது?

(இ) அவ்வாறு கட்டும்போது பிரயாணிகளின் சிற்றுண்டிச் சாலை ஒன்றும் கட்டப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) There is no proposal to construct a depot of the Madras State Transport Department at Cuddalore; but a bus stand of the department is proposed to be constructed at the place.

(b) No.

கால்நடை மருத்துவ, விவசாய கல்லூரிகள்

*515 கேள்வி.—திரு. ஆ. துரையரசன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்காவது திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் கால் நடை மருத்துவக் கல்லூரி ஒன்றும், விவசாயக் கல்லூரி ஒன்றும் நிறுவும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: (a) No, Sir.

(b) Does not arise.

திரு. வை. சங்கரன்: மதுரை சர்வகலாசாலையைப் பொறுத்த வரையில் . . .

MR. SPEAKER: The main question relates to Thanjavur district. Next question.

தாய்நாடு திரும்பிய இலங்கைவாழ் தமிழர்கள்

*516 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தாய்நாடு திரும்பிய இலங்கை வாழ் தமிழர்கள் ஜில்லாவாரியாக எத்தனை பேர்?

(இ) அவர்களுள், இலங்கையில் ஏற்பட்ட மொழிக் கலவரங்களின்போது தங்கள் உடைமைகளை இழந்து வந்துவிட நேர்ந்தது குறித்து அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர்?

(உ) அவர்கள் இழந்து வந்த தொகைக்கு இலங்கை அரசாங்கத்தினிடமிருந்து நமது மத்திய சர்க்கார் மூலம் இந்த அரசாங்கம் நஷ்டஈடு கோரிக்கை கொடுத்ததா?